# சென்மதி நிலுவை

## பொதுவான போக்குகள்


இலங்கையின் சென்மதி நிலுவைச் செயற்பாடு 1988 இல் ஏமாற்றமளிப்ப தாக விளங்கியது. வணிகக் கணக்குக் குறை 9 சதவீதத்தால் 1987 இன் சிஎஉ 5,250 இலட்சத்திலிருந்து (ரூ. 200,050 இலட்சம்) 1988 இல் சிஎஉ 5,740 இலட்சத்திற்கு (ரூ. 245,120 இலட்சம்) விரிவடைந்தது. இதேவேளை நடைமுறைக் கணக்குக் குறை 22 சதவீதத்தால் முன்னைய ஆண்டின் சிஎஉ 2,650 இலட்சத்தி லிருந்து (ரூ. 100,930 இலட்சம்) 1988 இன் சிஎஉ 3,240 இலட்சத்திற்கு (ரூ. 138,410 இலட்சம்) அதிகரித்தது. நாட்டின் சென்மதி நிலுவை நிலைமையின் பலயீனத்தின் அளவினைக் குறிக்கும் அடிப்படைக் குறிகாட்டியான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நடைமுறைக் கணக்குக் குறை 1987 இன் 5.1 சதவீதத்திலிருந்து 1988 இல் 6.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் அலுவல்சார் மாற்றல்கள் தவிர்ந்த நறைமுறைக் கணக் குக் குறையும் சிஎஉ 4,040 இலட்சத்திலிருந்து (ரூ. 154,040 இலட்சம்) சிஎஉ 4,660 இலட்சத்திற்கு (ரூ. 199,170 இலட்சம்) உயர்வடைந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக இது 1987 இல் 7.8 சதவீதத்திலிருந்து 1988 இல் 8.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. நடைமுறைக் கணக்குக் குறையினை நிதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் தேறிய நாணயமல்லா மூலதனப் பாய்ச்சல் 1988 இல் 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதனால் ஏற்பட்ட முழுக் குறை யாகிய சிஎஉ 1,010 இலட்சம் (ரூ. 50,000 இலட்சம்) கொண்ட மொத்தக் குறை யானது நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து எடுப்பனவு செய்வதன் மூலம் நிதியிடப்பட வேண்டியிருந்தது.


1987 இறுதியில் சிஎஉ 4,150 இலட்சமாக விளங்கிய (ரூ. 181,340 இலட்சம்) இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1988 இறுதியில் சிஎஉ 3,930 இலட்சத்திற்கு (ரூ. 174,820 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. அமைப்பு ரீதியான சீராக்க வசதிகளின் கீழான சிஎஉ 450 இலட்சத்தையும் இழப்பீட்டு நிதியிடல் வசதிகளின் கீழான சிஎஉ 1,090 இலட்சத்தையும் உள்ளடக் கிய சிஎஉ 1,540 இலட்சம் கொண்ட தொகை பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து ஏற்றுமதிப் பற்றுக்குறைக்காக எடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட சாதகமற்ற போக்கின் விளைவாக நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன.

1988 இன் சென்மதி நிலுவையில் பாதகமான அபிவிருத்திகள் ஏற்பட்ட தற்கு முக்கிய காரணியாக நாட்டில் தொடர்ச்சியாக இடம் பெற்ற உள்நாட்டுக் கலவரங்கள் விளங்கின. ஒத்தோபரின் பின்பு ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களின் அதிகரிப்பினால் ஏற்றுமதி வழங்கல்களில் தடங்கல் ஏற்பட்டது மட்டுமன்றிச் சுற்றுலாத்துறையின் மீட்சியிலும் தடைகளை உண்டுபண்ணியது. மேலும் சென்மதி நிலுவை செயலாற்றத்தினை முன்னேற்ற விளையும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் சீராக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொருத்தமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலும், நாட்டின் தொடர்ச்சியான உறுதியற்ற நிலைமை காரணமாகத் தடைப்பட்டது.

## சென்மதி நிலுவை

ஆண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

வருவாயினைப் பெருமளவுக்கு உள்ளடக்கிய வட்டிப் பெறுகைகள் முன்னைய ஆண்டில் வருவாயாகப் பெறப்பட்ட சிஎஉ 530 இலட்சத்துடன் (ரூ. 20,470 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 510 இலட்சமாக (ரூ. 21,710 இலட்சம்) விளங்கின. பன்னாட்டு வட்டி வீதங்கள் அதிகரித்தபோதும் 1988 இல் வெளிநாட்டுச் சொத்து நிலைமை பலவீனமடைந்தமையின் விளவாக சிஎஉ நியதிகளில் வருவாய்கள் வீழ்ச்சியடைந்திருந்தன. இதேவேளை இலங்கையில் உள்ள வதியாதோர் தொழில் முயற்சிகளின் இலாபங்களினதும் பங்கிலாபங்களினதும் மீளவனுப்பல்கள் காரணமாக ஏற்பட்ட முதலீட்டு வருவாயின் வெளிப்பாய்ச்சல் 1987 இன் சிஎஉ 270 இலட்சத்திலிருந்து (ரூ. 10,330 இலட்சம்) 1988 இல் சிஎஉ 150 இலட்சத்திற்கு (ரூ. 6,270 இலட்சம்) மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந்தது.


1983 இல் திடீரென ஆரம்பித்த உள்நாட்டுக் குழப்பங்களுடன் தொடங்கிய சுற்றுலாப் பெறுகைகளின் கீழ்நோக்கிய போக்கானது இவ்வாண்டிலும் தடுத்து நிறுத்தப்படவில்லை. சுற்றுலாவில் இருந்தான மொத்த வருவாய்கள் 1987 இன் சிஎஉ 550 இலட்சத்திலிருந்து (ரூ. 21,070 இலட்சம்) 1988 இல் சிஎஉ 460 இலட்சமாக (ரூ. 19,640 இலட்சம்) அல்லது 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில் வெளிநாட்டுப் பயணங்களிலான செலவினம் 1988 இல் சிறிதளவால் அதிகரித்திருந்தது.

முன்னைய ஆண்டினைப்போன்று பணிகள் கணக்கில் துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி வகைகள் 1988 இல் முன்னேற்றத்தைக் காட்டின. இந்த வகையில் உள்ள மிகை 1987 இன் சிஎஉ 20 இலட்சத்திலிருந்து (ரூ. 650 இலட்சம்) 1988 இல் சிஎஉ 60 இலட்சத்திற்கு (ரூ. 2,190 இலட்சம்) உயர்வடைந்தது. பெருமளவு மிகையானது துறைமுகப் பணிகள், எயர் லங்காவின் பயணிகள் கட்டணங்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரித்த வருவாய்களினாலும் எயர் லங்காவின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறைப்புகளினாலும் ஏற்பட்டதாகும். பல்வகைப் பணிக் கொடுப்பனவுகள் இவ்வகை கொடுப்பனவுகளை சமன்படுத்தியதனால் பணிகள் கணக்கில் 1988 இன் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக எவ்வித தேறிய சுமையும் இருக்கவில்லை.

வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையரின் உள்வரும் பண அனுப்பல்களைப் பெருமளவிற்குக் கொண்டிருந்த தனியார் பணவனுப்பல்களின் வடிவிலான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் 1988 இல் 3 சதவீதத்தினால் குறைவடைந்து நான்காவது தொடர்ச்சியான ஆண்டாகத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. தனியார் மாற்றல்களிலிருந்துவரும் மொத்தப் பெறுகைகள் 1987 இன் சிஎஉ 2,700 இலட்சத்துடன் (ரூ. 103,240 இலட்சம்) ஒப்பிடுகையில் 1988 இல் சிஎஉ 2,620 இலட்சமாக (ரூ. 111,940 இலட்சம்) விளங்கின. அலுவல்சார் கொடைகள் 1987 இன் சிஎஉ 1,390 இலட்சத்திலிருந்து (ரூ. 53,110 இலட்சம்) 1988 இல் சிஎஉ 1,420 இலட்சத்திற்கு (ரூ. 60,770 இலட்சம்) சிறிதளவால் அதிகரித்தன. செயற்றிட்டக் கொடைகள் சிஎஉ 940 இலட்சமாக (ரூ. 40,060 இலட்சம்) விளங்கி மொத்த அலுவல்சார் மாற்றல்களில் 66 சதவீதத்திற்கு வகை கூறியவேளையில், பண்டக் கொடைகள் மிகுதிக்கு வகை கூறின. இதனால் தனியார், அலுவல்சார் மூலங்களிலிருந்தான இணைந்த மாற்றல் பெறுகைகள் 1988 இல் சிஎஉ நியதிகளில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. வழமையாகப் பொருட்கள், பணிகளின் குறையில் ஏற்படும் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியானது தேறிய மாற்றல் பெறுகைகளிலிருந்து ஈடுசெய்யப்படும். எனினும் 1988 இன் தேறிய மாற்றல் பெறுகைகள் பொருட்களினதும், பணிகளினதும் குறையில்


## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுதோறும்



## பெயரளவிலான செலாவணி வீதங்கள் *

1980=100




இலங்கை மத்திய வங்கி.

* வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கின்றது.

அட்டவணை 1.37

## செலாவணி வீத அசைவுகள் 1984—1988

| விடயம் | ஆண்டு முடிவில் செலாவணி வீதங்கள் (அலகொன்றுக்கு ரூபா) | | | | | முந்திய ஆண்டுக்கு மேல் சதவீத மாற்றம் (அ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 |
| டியூச் மார்க் ... | 8.3495 | 11.1074 | 14.6727 | 19.2826 | 18.4797 | 9.05 | – 24.83 | – 24.30 | – 23.91 | 4.34 |
| பிரான்சிய பிராங்கு ... | 2.7276 | 3.6167 | 4.4337 | 5.6936 | 5.4121 | 9.05 | – 24.58 | – 18.43 | – 22.13 | 5.20 |
| இந்திய ரூபாய் ... | 2.1192 | 2.2575 | 2.1645 | 2.4043 | 2.1848 | 11.04 | – 6.13 | 4.30 | – 9.97 | 10.05 |
| யப்பானிய யென் ... | 0.1050 | 0.1360 | 0.1794 | 0.2491 | 0.2631 | 2.00 | – 22.79 | – 24.19 | – 27.98 | – 5.32 |
| ஸ்டேர்லிங் பவுண் ... | 30.5111 | 39.5764 | 41.7961 | 57.1721 | 59.0786 | 17.94 | – 22.91 | – 5.31 | – 26.89 | – 3.23 |
| ஐ. அ. டொலர் ... | 26.2800 | 27.4075 | 28.5200 | 30.7625 | 33.0325 | – 4.87 | – 4.11 | – 3.90 | – 7.29 | – 6.87 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 25.8065 | 30.0339 | 34.7998 | 43.2684 | 44.2820 | 1.24 | – 14.08 | – 13.70 | – 19.57 | – 2.29 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) மாற்றங்கள் இலங்கை ரூபாவிற்குச் சமனாக வெளிநாட்டு நாணயத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டன.

குறிப்பு: கழித்தல் அடையாளம் தேய்வினைக் குறிக்கிறது.

## தாக்கமுள்ள செலாவணி விதங்கள் *

1980 = 100




இலங்கை மத்திய வங்கி

* வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கின்றது

**வெளிநாட்டுப் படுகடன்**

இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 1987 இறுதியின் சிஎஉ 33,720 இலட்சத்திலிருந்து (ரூ. 1,448,890 இலட்சம்) 1988 இறுதியில் சிஎஉ 36,790 இலட்சத்திற்கு (ரூ. 1,625,480 இலட்சம்) அல்லது சிஎஉ நியதியில் 9 சதவீதத்தாலும், ரூபா நியதிகளில் 12 சதவீதத்தாலும் உயர்வடைந்து காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் 1987 இன் 65 சதவீதத்திலிருந்து 1988 இல் 70 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் எடுப்பனவுகளை உள்ளடக்கிய நடுத்தர நீண்டகாலக் கடன்கள் 1988 இறுதியில் மொத்த வெளிநின்ற படுகடனில் 95 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் குறுங்காலக் கடன்கள் 5 சதவீதமாக விளங்கின. நடுத்தர நீண்டகாலப் படுகடனின் வெளிநின்ற மட்டமானது 1987 இன் சிஎஉ 31,790 இலட்சத்திலிருந்து (ரூ. 1,365,410 இலட்சம்) 1988 இல் சிஎஉ 35,090 இலட்சமாக (ரூ. 1,549,920 இலட்சம்) அதிகரித்தது. எனினும் முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநின்ற கடன்பாடுகள் சிஎஉ 410 இலட்சத்திலிருந்து சிஎஉ 50 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமை காரணமாகக் குறுங்காலப் படுகடன் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 1,920 இலட்சத்திலிருந்து (ரூ. 83,480 இலட்சம்) சிஎஉ 1,700 இலட்சத்திற்கு (ரூ. 75,560 இலட்சம்) 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அரசின் வெளிநின்ற படுகடனும் 1987 இன் சிஎஉ 25,980 இலட்சத்திலிருந்து (ரூ. 1,124,240 இலட்சம்) 1988 இல் சிஎஉ 28,260 இலட்சத்திற்கு (ரூ. 1,251,460 இலட்சம்) குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. செயற்றிட்டக் கடன்களின் வெளிநின்ற மட்டம் 1987 இன் சிஎஉ 16,810 இலட்சத்திலிருந்து (ரூ. 727,510 இலட்சம்) 1988 இல் சிஎஉ 19,240 இலட்சத்திற்கு (ரூ. 851,760 இலட்சம்) அதிகரித்தது. வெளிநின்ற செயற்றிட்டமல்லாக் கடன்களும் சிஎஉ நியதிகளில் சிறிதளவால் அதிகரித்து 1988 இறுதியில் சிஎஉ 8,760 இலட்சமாக (ரூ. 383,160 இலட்சம்) விளங்கின. எனினும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களின் அரச உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் 1987 இன் சிஎஉ 2,060 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 1,930 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் அரச உத்தரவாதமளிக்கப்படாத படுகடன்கள் முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே விளங்கின.

தனியார்துறையின் நடுத்தர, நீண்டகாலப் படுகடனின் வெளிநின்ற மட்டம் 1988 இல் அதிகரித்தது. அரச உத்தரவாதத்துடனை தனியார்துறைப் படுகடன் சிஎஉ 980 இலட்சத்திற்கு (ரூ. 43,590 இலட்சம்) 2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அரச உத்தரவாதமளிக்கப்படாத படுகடன் மட்டம் 1987 இன் சிஎஉ 1,070 இலட்சத்திலிருந்து (ரூ. 46,310 இலட்சம்) 1988 இல் சிஎஉ 1,310 இலட்சத்திற்கு (ரூ. 57,860 இலட்சம்) அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியத்திற்கான இலங்கையின் படுகடன் கடப்பாடுகள், 1988 மாச்சில் பன்னாட்டு நாணய நிதி யத்திலிருந்து சென்மதி நிலுவை உதவியினைப் பெற்றதன் காரணமாக 1987 இன்சிஎஉ 1,650 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 2,540 இலட்சத்திற்கு அதிகரித்தன.

அட்டவணை 1.38

## வெளிநின்ற பகிர்ந்தளிக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் 1986—1988

| விடயம் | சிஎஉ பத்து இலட்சம் | | | பத்து இலட்சம் ரூபாய்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 (அ) | 1988 (ஆ) | 1986 | 1987 (அ) | 1988 (ஆ) |
| 1. நடுத்தர கால, நீண்டகால கடன் ... ... | 3,227 | 3,179 | 3,509 | 111,816 | 136,541 | 154,992 |
| 1.1 அரசு ... ... | 2,551 | 2,598 | 2,826 | 88,760 | 112,424 | 125,146 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்கள்... ... | 244 | 206 | 193 | 8,497 | 8,811 | 8,552 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை ... ... | 64 | 96 | 98 | 2,246 | 4,142 | 4,359 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் ... ... | 22 | 7 | 7 | 749 | 307 | 23 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார்துறை ... ... | 112 | 107 | 131 | 3,893 | 4,631 | 5,786 |
| 1,6 ப. நா. நி. எடுப்பனவுகள் ... ... | 234 | 165 | 254 | 7,671 | 6,226 | 10,861 |
| 2. குறுங்காலக்கடன் ... ... | 151 | 192 | 170 | 5,277 | 8,348 | 7,556 |
| 2.1 மத்திய வங்கிக் கடன்பாடுகள் ... ... | — | 41 | 5 | — | 1,801 | 231 |
| 2,3 ஏனையவை (இ) ... ... | 151 | 151 | 165 | 5,277 | 6,547 | 7,325 |
| 3. மொத்த படுகடன் ... ... | 3,378 | 3,372 | 3,679 | 117,093 | 144,889 | 162,548 |
| 4, மொ உ. உ. ஆன படுகடனின் விகிதம் % ... ... | 61.9 | 65.3 | 70.5 | | | |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும், வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் இருந்தான கொழும்பு பெரும் பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்களினதும் வர்த்தகக் கொடுகடன்களையும், கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றன.

# அட்டவணை 1.39

## வெளிநின்ற பகிர்ந்தளிக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் 1984–1988

| வகை | சிஎஉ. பத்து இலட்சம் | | | | | ரூபா பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1984 | 1985 | 1986 | 1987 | 1988(அ) |
| 1. நடுத்தர, நீண்டகால படுகடன் ... | 2,928 | 3,086 | 3,227 | 3,179 | 3,509 | 75,719 | 91,804 | 111,816 | 136,541 | 154,992 |
| 1.1 செயற்றிட்டக் கடன்கள் ... | 1,069 | 1,315 | 1,549 | 1,681 | 1,924 | 27,597 | 39,498 | 53,890 | 72,751 | 85,176 |
| 1.2 செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 922 | 913 | 928 | 871 | 876 | 23,781 | 27,412 | 32,287 | 37,661 | 38,316 |
| 1.3 நிரம்பலர் கொடுகடன் ... | 24 | 24 | 25 | 28 | 27 | 610 | 687 | 870 | 1,195 | 1,180 |
| 1.4 ப.நா.நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 113 | 86 | 59 | 34 | 18 | 2,906 | 2,592 | 2,055 | 1,470 | 813 |
| 1.5 ப.நா.நி.–ஏனைய கடன்கள் ... | 328 | 293 | 234 | 165 | 254 | 8,644 | 7,914 | 7,671 | 6,226 | 10,861 |
| 1.6 ஏனையவை (ஆ) ... | 472 | 455 | 432 | 401 | 410 | 12,181 | 13,701 | 15,043 | 17,238 | 18,646 |
| 2. குறுங்காலப் படுகடன் ... | 199 | 187 | 151 | 192 | 170 | 5,120 | 5,645 | 5,277 | 8,348 | 7,556 |
| 2.1 மத்திய வங்கிக் கடன்பாடுகள் ... | ... | ... | — | 41 | 5 | 3 | 6 | — | 1,801 | 231 |
| 2.2 ஏனையவை ... | 199 | 187 | 151 | 151 | 165 | 5,117 | 5,639 | 5,277 | 6,547 | 7,325 |
| 3. மொத்தப் படுகடன் ... | 3,126 | 3,273 | 3,378 | 3,372 | 3,679 | 80,839 | 97,449 | 117,093 | 144,889 | 162,548 |

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்,

(அ) தற்காலிகமானவை.

(ஆ) அரச கூட்டுத்தாபனங்கள், தனியார் துறையினரால் பெறப்பட்ட நீண்டகாலக் கடன்களையும், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவிலிருந்தான கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்களினது கடன்களையும் உள்ளடக்கும்.

1988 இன் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்கள் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தோற்றத்தில் ஒரு முன்னேற்றத்தினை ஏற்படுத்தின. வர்த்தகக் கடன்பாடுகளுக்கு ஊக்கமளிக்காத அரசாங்கத்தின் மதிநுட்பம் வாய்ந்த கொள்கைகளின் காரணமாக வர்த்தகக் கடன்பாடுகளின் பங்கு 1987 இற்கும் 1988 இற்கும் இடையில் 21 சதவீதத்திலிருந்து 19 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநின்ற படுகடனின் முதிர்ச்சியின் தன்மையும் கூடப் பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகளை உள்ளடக்கிய நடுத்தர நீண்ட காலக் கடன்களின் பங்களிப்பு 1987 இன் 94 சதவீதத்திலிருந்து 1988 இல் 95 சதவீதத்திற்கு அதிகரித்தமையினால் சிறிதளவிற்கு முன்னேற்றமடைந்தது. மறுபுறத்தில் தனியார் படுகடனின் பங்கு 1987 இன் 13 சதவீதத்திலிருந்து 1988 இல் 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

நடுத்தர நீண்ட காலக் கடன்களின் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் எல்லா வெளிநாட்டுக் கடன்களினதும் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் சிஎஉ 3,830 இலட்சத்திலிருந்து (ரூ. 145,380 இலட்சம்) 1988 இல் சிஎஉ 3,990 இலட்சத்திற்கு (ரூ. 170,180 இலட்சம்) அதிகரித்தது. இது 1988 இன் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் 4 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்ததுடன், இது வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினாலேயே முழுமையாக ஏற்பட்டது. 1988 இல் வட்டிக் கொடுப்பனவுகள் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் 37 சதவீதத்திற்கு வகை கூறின. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,300 இலட்சத்திலிருந்து (ரூ. 49,160 இலட்சம்) சிஎஉ 1,490 இலட்சத்திற்கு (ரூ. 63,630 இலட்சம்) அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்து வெளிநாட்டுச் சந்தைகளில் வட்டி வீதங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. மாறாக கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 2,540 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,510 இலட்சத்திற்குச் சிறிதளவுக்கு வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டு நாணய நிதியக் கடன்கள் தொடர்பான மீள் கொள்வனவுகளும் 1987 இன் சிஎஉ 690 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 640 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் பன்னாட்டு நாணய நிதியக் கடன்கள் தொடர்பான பணிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டில் செய்யப்பட்ட புதிய எடுப்பனவுகளின் விளைவாக சிஎஉ 180 இலட்சத்திலிருந்து சிஎஉ 230 இலட்சத்திற்கு உயர்வடைந்து காணப்பட்டன.

பொருட்களினதும், பணிகளினதும் ஏற்றுமதிகளின் விகிதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1987 இன் 27.7 சதவீதத்திலிருந்து 1988 இல் 28.8 சதவீதத்திற்கு அதிகரித்துக் காணப்பட்டன. படுகடன் பணி விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது உயர்வான படுகடன் பணிக் கொடுப்பனவுகள், ஏற்றுமதிகளின் மந்தமான வளர்ச்சி என்பனவற்றினால் ஏற்பட்டதாகும். பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த படுகடன் பணி விகிதம் முன்னைய ஆண்டின் 21.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் 22.5 சதவீதமாக விளங்கியது. அலுவல்சார் மாற்றல்கள் நீங்கலாக மொத்த நடைமுறைப் பெறுகைகளின் விகிதமான முழுமையான படுகடன் பணிக் கொடுப்பனவுகளும் 1987 இன் 23.2 சதவீதத்திலிருந்து 1988 இல் 24.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

அட்டவணை 1.40

## படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1984—1988

| விடயம் | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 (அ) | 1988 (ஆ) | 1984 | 1985 | 1986 | 1987 (அ) | 1988 (ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 308.0 | 340.6 | 356.8 | 383.3 | 399.2 | 8,026 | 9,362 | 11,658 | 14,538 | 17,018 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் ... | 132.3 | 165.5 | 213.5 | 253.5 | 250.7 | 3,438 | 4,533 | 6,940 | 9,622 | 10,655 |
| பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ... | 22.7 | 35.8 | 58.6 | 69.3 | 64.1 | 593 | 967 | 1,856 | 2,565 | 2,682 |
| ஏனையவற்றிற்கு ... | 109.6 | 129.7 | 154.9 | 184.2 | 186.6 | 2,844 | 3,566 | 5,084 | 7,057 | 7,973 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 175.7 | 175.1 | 143.3 | 129.8 | 148.5 | 4,588 | 4,829 | 4,718 | 4,916 | 6,363 |
| பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ... | 31.4 | 27.1 | 21.3 | 18.3 | 23.4 | 819 | 746 | 701 | 663 | 980 |
| ஏனையவற்றிற்கு ... | 144.3 | 148.0 | 122.0 | 111.5 | 125.1 | 3,769 | 4,083 | 4,017 | 4,253 | 5,384 |
| 2. பொருட்கள், பணிகளின் ஏற்றுமதிகள் ... | 1,756.1 | 1,619.0 | 1,352.6 | 1,384.4 | 1,386.9 | 45,765 | 44,655 | 44,495 | 52,819 | 59,288 |
| 3. பொருட்கள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான வரவுகள் ... | 2,049.6 | 1,906.6 | 1,622.4 | 1,654.7 | 1,648.5 | 53,418 | 52.574 | 53,367 | 63,143 | 70,483 |
| 4. படுகடன் பணிவிகிதம் (2 இன் % ஆக 1) | | | | | | | | | | |
| முழு மொத்த விகிதம் ... | 17.5 | 21.0 | 26.4 | 27.4 | 28.8 | 17.5 | 21.0 | 26.2 | 27.5 | 28.7 |
| ப.நா.நி. தவிர்ந்த ... | 14.5 | 17.2 | 20.5 | 21.4 | 22.5 | 14.5 | 17.1 | 20.5 | 21.4 | 22.5 |
| 5. படுகடன் பணி விகிதம் (3இன் % ஆக 1 ... | 15.0 | 17.9 | 22.0 | 23.2 | 24.2 | 15.0 | 17.8 | 21.8 | 23.0 | 24.1 |
| முழு மொத்த விகிதம் ப. நா. நி. தவிர்ந்த ... | 12.4 | 14.6 | 17.1 | 17.9 | 18.9 | 12.4 | 14.5 | 17.1 | 17.9 | 18.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
குறிப்பு: ரூபாய் பெறுமதிகளிலும் சி.எ.உ. பெறுமதிகளிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு செலாவணி வீதங்களிலேற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.